**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 25/2017**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–1 இளையராணி –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 07.02.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:**

1) நான் தாவா சொத்து இருக்கும் ஊரில்தான் குடியிருக்கிறேனா என்றால் ஆமாம். தாவா சொத்து மாரியம்மன் கோயில் கிழக்குத் தெரு வீதிக்கு தென்புறம் உள்ளது என்றால் சரிதான். கிழக்கு தெரு வீதியில் தென்வடல் ரோடு செல்கிறதா என்றால் ஆமாம். தென்வடல் ரோட்டிற்கும் கிழக்குபுறம் தெய்வசகாயம் இடம் உள்ளது என்றால் சரிதான். தெய்வசகாயம் இடத்திற்கு கிழக்குபுறம் இருதயமேரி, பாலசுப்பிரமணி இடம் உள்ளது என்றால் சரிதான். இருதயமேரி, பாலசுப்பிரமணி இடத்திற்கு மேற்குபுறம் ராமசாமி இடம் உள்ளது என்றால் இல்லை, எங்கள் இடம்தான் உள்ளது. நான் சொல்வது தவறு என்றும், அது ராமசாமி இடம் என்றும், அவரது இடத்திற்கு மேற்குபுறம் தனலெட்சுமி இடமும் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு கிழக்குபுறம் அய்யாகண்ணு இடம் உள்ளது என்றால் சரிதான்.

2) தாவா சொத்து என்னுடையது என எந்த ஆவணத்தின் அடிப்படையில் கூறுகிறேன் என்றால், 1958ம் வருட கிரைய ஆவணத்தின் அடிப்படையில் உரிமை கோருகிறேன். 1958ம் வருட கிரைய ஆவணத்தின் நான்கெல்லை தவறு என்றால் சரியல்ல. தனலெட்சுமியின் மாமனாரின் தகப்பனார் பெயர் சேதுப்பட்டி முத்தப்பஉடையார் என்றால் சரிதான். 1958ம் வருட கிரைய ஆவணத்தில் சேதுப்பட்டி முத்தப்பஉடையார் வீட்டிற்கு மேற்கு என கண்டுள்ளது என்றால் சரிதான். தெய்வசகாயம் உடையார் வீட்டிற்கு கிழக்கு என கண்டுள்ளது என்றால் சரிதான். தெய்வசகாயம் உடையார் வீட்டிற்கு கிழக்கில் இருதயமேரி, பாலசுப்பிரமணி இருவரின் நிலம் உள்ளது என்றும், எங்கள் நிலம் இல்லை என்றால் சரியல்ல. அய்யாக்கண்ணு இடத்திற்கு மேற்குபுறம் தனலெட்சுமியின் வீடுதான் உள்ளது என்றும், எங்கள் இடம் இல்லை என்றால் சரியல்ல.

3) எனது சாட்சியத்தின் படி 1958ம் வருட கிரைய ஆவணத்தில் கண்டுள்ள நான்கெல்லை தவறானது என்றால் சரியல்ல. 1958ம் வருட கிரைய ஆவணம் பி.சா.ஆ.1ல் சர்வே எண் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனது தந்தையார் 2016ம் வருடம் தானசெட்டில்மென்ட் ஆவணம் 1986/2016 ஆவணத்தின் மூலம் கொடுத்த சொத்தை எனது என்று உரிமை கொண்டாடுகிறேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, செய்திருக்கிறேன். நான் சொல்வது தவறு என்றும், இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்யாததற்கான குறிப்பிட்ட காரணம் என்னவென்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துவிட்டேன், அவரிடம்தான் கொடுக்க வேண்டும். மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் தாக்கல் செய்கிறேன்.

4) மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்தால் அது மோசடியாக தயார் செய்யப்பட்டது என்ற உண்மை தெரிந்துவிடும் என்பதால்தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பொதுவாக ஒரு நபர் ஒரு இடத்தை அனுபவம் செய்துவந்தால் அவரது அனுபவத்தை உறுதி செய்து வருவாய்துறையில் பட்டா கொடுப்பார்கள் என்றால் சரிதான். பட்டா எண் 1041 என்பதன் அடிப்படையில்தான் எனக்கு என் தகப்பனார் 2016ல் தான செட்டில்மென்ட் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். பட்டா எண் 1041 என்பது வருவாய்துறையால் வழங்கப்படாத போது அதன் அடிப்படையில் எழுதப்பட்டதாக சொல்லும் தானசெட்டில்மென்ட் ஆவணம் மோசடியானது என்றால் சரியல்ல. பட்டா எண் 1041 ஆவணம் வருவாய்துறையால் வழங்கப்பட்டது அல்ல என்றும், மோசடியாக எங்களால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதனால்தான் பட்டா எண் 1041 ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5) சர்வே எண் 710/4 வாதி பெயரில் பட்டா வழங்கப்பட்டு அவர் அனுபவத்தில் உள்ளது என்றும், சர்வே எண் 710/5 ராமசாமி பெயருக்கு பட்டா வழங்கப்பட்டு அவர் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் எழுதிக் கொடுத்த

தான செட்டில்மென்ட் ஆவணத்தில் நான் கிரையம் பெற்ற சொத்து மற்றும் கூடுதலாக அனுபவம் செய்து வந்த சொத்து என எழுதியுள்ளார் என்றால் சரிதான். உண்மையில் எனது தகப்பனார் கூடுதலாக நிலத்தை அனுபவம் செய்திருந்தால் அவர் பெயருக்கு பட்டா வழங்கியிருப்பர் என்றும், பட்டா எண் 1041 மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எவ்வளவு நிலத்தில் எந்த இடத்தில் எனது தகப்பனார் அனுபவம் செய்து வந்தார் என்பதை காட்ட வருவாய்துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனாரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6) தரகம்பட்டி சார்பதிவாளர், வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பி, மேற்படி கடிதத்திற்கு பட்டா எண் 1041 போலியானது என வட்டாட்சியர் பதில் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. சர்வே எண் 710/4 மற்றும் 710/5 ற்கு வாதி மற்றும் மற்றொருவர் பெயரில் பட்டா உள்ள போது நாங்கள் போலியாக பட்டா தயார் செய்து அதன் அடிப்படையில் மோசடியாக ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. சர்வே எண் 710/4, 710/5 வாதி மற்றும் மற்றொருவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்றும், அது அவர்கள் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், உண்மையில் மேற்படி நிலங்கள் எங்கள் அனுபவத்தில் இருந்திருந்தால் வாதி பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்திருப்போம் என்றால் சரியல்ல. எனவே வாதியின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பொதுவாக நீதிமன்றத்தில் போலியாக ஆவணம் தாக்கல் செய்து பொய்சாட்சி அளித்தால் சட்டப்படி தண்டிக்கப்படுவார்கள் என்றால் சரிதான், ஆனால் நான் பொய்சாட்சி சொல்லவில்லை.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**